
## திராவிடத்தால் வாழ்கிறோம்

890

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

திரைக்கதை வசனம்
# கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

18

# பணம்: கலைவாணர் பாடிய ‘தீனா மூனா கானா’!





படங்கள் உதவி : ஞானம்

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

கலைஞர், திரைக்கதை வசனம் எழுதி கலைவாணர் இயக்கிய மற்றொரு திரைப்படம் ‘பணம்’. 1952-இல் வெளிவந்த இந்தப் படத்தினை மதராஸ் பிக்சர்ஸ் ஏ.எல்.சீனிவாசன் தயாரித்தார். இது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த இரண்டாவது திரைப்படமாகும். இப்படத்தின் மூலக்கதை என்.வி.பாபு. இத்திரைப்படம் வரதட்சணைக் கொடுமையால் சீரழியும் ஒரு பெண்ணின் வாழ்க்கைக் கதையைப் பேசிய திரைப்படமாகும்.

இப்படத்தில் முதன்மையாக மூன்று பெண்கள் வருகின்றனர். ஒருவர் படத்தின் நாயகியும் மருத்துவர் கந்தசாமியின் (பி.ஆர்.பந்துலு) மகளுமான ஜீவா (பத்மினி). மற்றொருவர் ஜமீன்தார் மகள் கோமதி (வி.சுசீலா). மூன்றாமவர் மருத்துவ உதவியாளர் நல்லம்மா (டி.ஏ.மதுரம்). இவர்களைச் சுற்றிதான் படத்தின் கதை நகர்கிறது.

### படத்தின் கதை

பணத்தாசையும் கருமித்தனமும் நிறைந்த பணக்காரர் ஆடியபாதம் முதலியார் (கே.ஏ.தங்கவேலு) அவர்களின் மகன் உமாபதி (சிவாஜி)க்கும் ஜீவா (பத்மினி)வுக்கும் திருமணம் முடிந்து மறுவீட்டுக்குப் பெண்ணும் மாப்பிள்ளையும் செல்கின்றனர். அங்கு போன இடத்தில் தோழிகளுடன் சேர்ந்து பாறையின் மீது ஏறிய ஜீவா விழுந்து விடாமல் இன்ஸ்பெக்டர் ஈசுவரன் (கே.ராமச்சந்திரன்) கீழே இறக்கிவிடுகிறான். அந்த இன்ஸ்பெக்டருக்கு ஜீவாவின் மீது ஆசை ஏற்பட்டு விடுகிறது. அந்த ஆசையைப் புரிந்துகொள்ளும் குருநாதம்பிள்ளை (வி.கே.ராமசாமி) அதனைப் பயன்படுத்திக் கொண்டு ஈசுவரனுக்குக் கையாளாகச் செயல்படுகிறான்.

கந்தசாமி மருத்துவரால் ஒப்புக்கொண்டபடி வரதட்சணைப் பணம் 5,000 ரூபாயையும் சீர்வரிசைகளையும் மறுவீட்டுக்கு வந்த மாப்பிள்ளை பெண்ணிடம் கொடுத்து அனுப்ப முடியவில்லை. வெறும் கையுடன் திரும்பும் மகனையும் மருமகளையும் கண்டு கொதித்தெழும் ஆடியபாதம் முதலியார் உமாபதிக்கு அவனது தந்தை ஆடியபாதம் சொல்கிறபடி, ஜீவா நடத்தைக் கெட்டவள்தான் என்பதை ஏற்றுக்கொண்டு மறுதிருமணத்திற்கு ஒப்புக்கொள்கிறான். குருநாதம்பிள்ளையின் ஏற்பாட்டில் ஆடியபாதம் முதலியார் வரதட்சணையாக 25 ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு ஜமீன்தார் மகள் கோமதியை உமாபதிக்கு மறுதிருமணம் செய்து வைக்கிறார்.

ஆனால், கோமதி ஏற்கனவே சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த சுந்தரத்தைக் (எஸ்.எஸ்.ராஜேந்திரன்) காதலித்து வந்ததாலும், தனது தந்தையால் கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்பட்ட காரணத்தினாலும் உமாபதியிடம், தான் மூன்று மாதக் கர்ப்பிணி என்று பொய் சொல்கிறாள். இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த உமாபதி, முதலிரவு அறையில் இருந்து வெளியேறி ஓடிப்போய், தனது இரு மனைவியரும் நடத்தைக் கெட்டவர்கள் என்று நினைத்து தற்கொலை செய்துகொள்ள முயற்சிக்கிறான். அப்போது அங்கு வரும் சுந்தரம் உமாபதியைத் தடுத்து அறிவுரை சொல்லிக் காப்பாற்றுகிறான்.

இதற்கிடையே மருத்துவரைக் கொலை செய்து அந்தப்பழியை உமாபதி மீது சுமத்தி கைதுசெய்து நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்துகின்றான் இன்ஸ்பெக்டர் ஈசுவரன். இறுதியில் ஆடியபாதம் வீட்டு வேலையாள் துரை (என்.எஸ்.கே) மூலம் உண்மைக் குற்றவாளி ஈசுவரன்தான் என்பது நிரூபிக்கப்பட்டு, உமாபதி விடுதலை செய்யப்படுகிறான். மனம் திருந்திய இன்ஸ்பெக்டர் ஈசுவரன் ஜீவாவிடம் ரூபாய் பத்தாயிரத்தைக் கொடுத்து, ‘இந்தப் பணத்தைக் கொண்டுபோய் உனது மாமனார் மூஞ்சியில் வீசிவிட்டு மீண்டும் உன் கணவனுடன் சேர்ந்து வாழ்’ எனச் சொல்லிவிட்டு துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு சாகிறான். அங்கு ஓடி வரும் உமாபதி முகத்தில் பணத்தை வீசி எறியும் ஜீவா அதே ஜீவாவை அவளது பிறந்த வீட்டுக்கே திரும்பிப் போகச் சொல்கிறார். கணவன் உமாபதியிடம் அழுது மன்றாடும் ஜீவாவுக்கு முதலில் பரிந்து பேசும் உமாபதி, தன்னைப் பகைத்துக்கொண்டால் ‘உனக்கு சொத்தில் ஒரு நயா பைசா கூடக் கிடைக்காது, அனைத்தையும் கோயிலுக்கு எழுதி வைத்து விடுவேன்’ என்று மிரட்டும் தந்தைக்குப் பயந்து மவுனமாகிறான். ஜீவா அழுதபடியே தந்தையிடம் திரும்புகிறாள்.

இதனை அறியும் இன்ஸ்பெக்டர் ஈசுவரனும் குருநாதம்பிள்ளையும் மருத்துவர் கந்தசாமிக்கு உதவும் சாக்கில், அடிக்கடி வீட்டுக்கு வந்து ஜீவாவை வீழ்த்திட முயற்சிக்கின்றனர். இவ்வாறு ஒரு முறை ஈசுவரன் இரவில் ஜீவா வீட்டுக்கு வந்து போவதைப் பார்க்கும் துப்பாக்கியை எடுத்துத் தன்னையும் சுட்டுக்கொண்டு கீழே விழுகிறாள். உமாபதி அழுது புலம்புகிறான். ஆனால், அது வெற்றுத் தோட்டா என்பதால், ஜீவா உயிர் பிழைக்கிறாள். ஆடியபாதம் மனம் திருந்தி அனைவரும் மீண்டும் ஒன்று சேர்வதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே படத்தின் கதை.

இந்தப் படத்தில் மூன்று ஜோடிகள் வருகின்றன. ஒன்று ஜீவா - உமாபதி, இரண்டு கோமதி - சுந்தரம், மூன்று நல்லம்மா - துரை. இம்மூன்று ஜோடிகளும் மூன்று விதமான வாழ்நிலையும் சிந்தனைமுறையும் கொண்டவர்களாக உள்ளனர். அதனால், பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ளும் விதமும் வெவ்வேறாக உள்ளன. ஆம், உமாபதியும் ஜீவாவும் இந்த ஆணாதிக்கச் சமூகம் கற்பிக்கும் பண்புகளை அப்படியே ஏற்றுக் கொண்டு வாழும் சராசரி ஆணும் பெண்ணுமாக வருகின்றனர். ஆனால், கோமதியும் சுந்தரமும் இந்தச் சமூகம் விதித்துள்ள கட்டுப்பாடுகளை மீறக்கூடியவர்களாக உள்ளனர். கோமதி தனது விருப்பப்படி சுந்தரத்தைக் காதலிக்கிறாள். தனது காரில் சுந்தரத்தை ஏற்றிக்கொண்டு ஊரை வலம் வருகிறாள். அதேபோல சுந்தரமும் சுயமரியாதை இயக்க மாநாடுகளில் பேசிக்கொண்டு திரிபவன் என குருநாதம்பிள்ளை ஒரு காட்சியில் சொல்கிறார்.

### கிழிந்த குடைக்குக் கருப்புச் சட்டை

ஆடியபாதம் வீட்டு வேலையாள் துரை பற்றிய அறிமுகமே மிகச் சிறப்பாக இருக்கிறது. துரை மடியில் உலகத்தைக் கட்டி வைத்திருப்பதாக மற்றொரு வேலையாள் பெருமாள் ஆடியபாதத்திடம் சொல்கிறான். ‘அது என்னடா’ என எசமான் ஆடியபாதம் கேட்க கையடக்கமான மிகச்சிறிய திருக்குறள் புத்தகத்தை எடுத்துக் காட்டுகிறான். அடுத்துக் குடை ரிப்பேர் செய்பவர் குடைக்கு ஒட்டுப் போட கருப்புத் துணி கேட்கும்போது ஆடியபாதம், ‘என் வீட்டு வேலைக்காரன் துரை கருப்புச்சட்டை அணிபவன்தான்’ அவனது சட்டையைத் தருகிறேன் என்கிறார்.

மற்றொன்று ‘திருக்குறள் முன்னணிக் கழகம்’ என்கிற பெயர்ப் பலகை இப்படத்தில் இடம்பெற்றுள்ளதுடன், ‘தீனா மூனா கானா’ என்கிற பாடலை, துரை (என்.எஸ்.கே.) பாடவும் செய்கிறார். துரைக்கும் நல்லம்மாவுக்கும் இடையிலான காதல் காட்சிகளும் உரையாடலும், ஒரு பாடலும் ஆணாதிக்கத்திற்கும் அன்றைய பழக்க வழக்கங்களுக்கும் எதிரானவையாக எழுதியிருப்பார்.

உதாரணமாக, துரை நல்லம்மாவிடம் தனது காதலைச் சொல்லும் காட்சியில், கலைஞர் எழுதிய உரையாடல் ஆணும் பெண்ணும் சமம் என்பதைப் பொட்டில் அடித்ததுபோலச் சொல்லும். குறிப்பாக, ‘மாப்பிள்ளைக்கு வரதட்சணை கொடுப்பதுபோல, படிச்ச பொண்ணுக்கும் மாப்பிள்ளை வீட்டுல இருந்து பணம் கொடுக்கணும்’ என நல்லம்மா வழியாக சொல்லும் கருத்தும், அன்றைய நாட்களில் பெரும் தாக்கத்தை உருவாக்கிய சமத்துவ அரசியலாக இருந்தன.

> **‘மாப்பிள்ளைக்கு வரதட்சணை கொடுப்பதுபோல, படிச்ச பொண்ணுக்கும் மாப்பிள்ளை வீட்டுல இருந்து பணம் கொடுக்கணும்!’**

...காட்சி விரியும்

### "விடுதலை அணி வகுப்பில் நானுமோர் உறுப்பினன்!"



முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்வில் பெருமைக்குரிய நிகழ்ச்சிகள் எவை? என்கிற கேள்விக்கு 13.07.1956 அன்று முரசொலியில் அவர் எழுதிய பதில் ஒன்று, இன்றைக்கும் காலப் பொருத்தமாக வைரலாகி உள்ளது. அந்த பதில் இதுதான்.

“நீ என்னை நண்பன் என்று அழைக்கின்றாய். பத்திரிகை உலகிற்கு நான் ‘முரசொலி’யின் ஆசிரியன். திரையுலகில் - நூல் உலகில் ஏட்டுலகில் - நான் எழுத்தாளன். நடிக்கவும் கற்றிருக்கிறேன் ஒரு சிறிது. சொற்பொழிவும் தெரியும். ஆனால், கருணாநிதி என்ற பெயர் இவைகளால் முழுமை அடையவில்லை நண்பா! இதோ, இந்தப் பட்டயத்தைப் பார்! விடுதலை அணி வகுப்பிலே நானுமோர் உறுப்பினன் என்று அறிவிக்கிறது.

எட்டணா கொடுத்து பெற்றுவிடக்கூடிய சீட்டு அல்லவே இது! நாட்டு விடுதலைக்குக் கொடி தூக்கும் வீரனென்று அறிவிக்கும் விருது நண்பா! நானும், நீயும் மற்றவர்களும் பழையபடை வீரர்கள் - பட்டயத்தைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் பலர் விடுதலை அணி வகுப்பில் நிறைந்த வண்ணமிருக்கின்றார், அவர்களெல்லாம் இதுபோல ஒரு பட்டயம் பெற்றிடுவார்! வீரப்பதக்கம் அதுவென்று பெருமைப்பட்டிடுவார்! இதைப் பெறுகின்ற நிகழ்ச்சி வாழ்நாளில் பெருமைக்குரிய நிகழ்ச்சியல்லவா?

என் வாழ்க்கையிலே பெருமைக்குரிய நிகழ்ச்சிகள் எவை? என்று உன் மடல் மூலம் கேட்டிருந்தாய். படைத் தலைவனின் கையொப்பம் கொண்ட விடுதலைப் படையின் பட்டயத்தைப் பெற்றதைவிட பெருமைக்குரிய நிகழ்ச்சி வேறென்ன இருக்கிறது; உன்னிடத்தில் சொல்ல! நான்பெற்ற இப்பெருமையை திராவிடத் தரணியிலுள்ளோர் அனைவரும் பெறட்டும்! தி.மு.கழகத்தில் சேரட்டும் - திராவிடம் விடுதலை அடையட்டும்! அதுதானே எனக்கும், உனக்கும், நம் பாசறையில் உள்ளவர்க்கும் உயிரினும் மேலான கடமை!” என முரசொலியில் தீட்டிய அந்த பதில் கடிதம் இன்றைக்குக் காலப்பொருத்தம்.

கழக உடன்பிறப்பினராகி, அதற்கான உரிமைச்சீட்டைப் பெறுவது எத்தனை பெருமைக்குரியது என்பதை உணர்த்துகிறது கலைஞரின் அந்த பதில். கழக உறுப்பினர் என்பது கலைஞருக்கு மட்டுமா பெருமை?

ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கும்தானே!

### ஃப்ளாஷ்பேக்



டாக்டர்
ஆ.பாலமுருகன்



### “நல்ல எதிர்காலம் இருக்குய்யா”!

2012-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, சென்னை, கோபாலபுரம் இல்லத்தில் சந்திக்கும் மாபெரும் வாய்ப்பைப் பெற்றோம். 2011-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சாத்தான்குளம் ஒன்றியத்தில் எங்களுடைய வார்டுகளில் அதிக வாக்குகள் பெற்று, மிகப்பெரிய வெற்றிபெற்றதை அவரிடம் எடுத்துக் கூறினோம். அதற்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் “உங்க எல்லாருக்கும் நல்ல எதிர்காலம் இருக்குய்யா” என்று வாழ்த்தினார். உடன் ஆழ்வார்திருநகரி ஒன்றியச் செயலாளர் பார்த்திபன், திருச்செந்தூர் ஒன்றியச் செயலாளர் ஏ.பி.ஆர் . ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.

**- டாக்டர் ஆ.பாலமுருகன், ஒன்றிய கழகச் செயலாளர், சாத்தான்குளம் தெற்கு ஒன்றியம், தூத்துக்குடி தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

### நம் வேர்கள் — ‘அன்னை’ மாத இதழ்!

மலரும் நினைவுகள் ஒன்றின் தலைப்பு: ம.லஆ ரு க

1958-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் தேதி பெரியார் பிறந்த நாளில், கழக சட்டமன்ற உறுப்பினர் சத்தியவாணி முத்து ‘அன்னை’ மாத இதழைத் தொடங்கினார். விழாவுக்கு சி.பி.சிற்றரசு தலைமை வகித்தார். ‘அன்னை’ அலுவலக பெயர்ப்பலகையை பேரறிஞர் அண்ணா திறந்து வைத்தார். முதல் இதழை கே.ஏ.மதியழகன் பெற்றுக் கொண்டார். தி.மு.கழகத்தில் பெண்களுக்காக தொடங்கப்பட்ட முதல் மாத இதழாக ‘அன்னை’ இருந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131